BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ஜார்ஜ் ஹிட்ச்காக் நினைவு நன்கொடை நிதி (George Hitchcock Memorial Endowment Fund) பெறுவதற்கான விண்ணப்பங்கள் இப்போது பெறப்படுகின்றன

***தீயணைப்பு சேவை அமைப்புகளில் தங்கள் தொழிற்பாதையை அமைத்துக்கொள்ள விரும்பும் ப்ராம்ப்ட்டன் நகரவாசிகள் இதற்காக விண்ணப்பிக்க உற்சாமளிக்கப்படுகிறார்கள்***

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 1, 2023) – தீயணைப்பு சேவைகளில் உங்கள் தொழிற்பாதையை அமைத்துக்கொள்ள நீங்கள் நாட்டம் கொண்டுள்ளீர்களா? ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பின் ஜார்ஜ் ஹிட்ச்காக் நினைவு நன்கொடை நிதி அமைப்பில் இப்போது இதற்கான விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

மறைந்த மண்டலத் தலைவர் ஜார்ஜ் ஹிட்ச்காக் அவர்களின் நினைவாக இந்த நிதி அமைப்பு உருவாக்கப்பட்டது, அவர் தீயணைப்பு சேவையில் ஒரு தொழிலைத் தொடர பலருக்கும் வழிகாட்டி ஊக்குவித்தார்.

தீயணைப்பு சேவையில் பணிபுரிபவர்களின் பள்ளிக்கல்விக்கு அடுத்த நிலை கல்விக் கட்டணமாக $1,000 உதவித்தொகை கிடைக்கிறது. இதற்கான விண்ணப்பதாரர்கள் தீயணைப்பு தொடர்பான திட்டத்தில் ஒன்ட்டாரியோ பள்ளிக்கல்விக்கு அடுத்த நிலை டிப்ளமோ படிப்பைத் தொடர வேண்டும்.

**ஆள்சேர்ப்பு செய்முறை**

விண்ணப்பங்கள் ஆன்லைனில் www.bramptonfire.com இல் கிடைக்கும், மற்றும் firelife@brampton.ca மூலமாக சமர்ப்பிக்கப்படவேண்டும். விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க கடைசி தேதி ஏப்ரல் 14, 2023 ஆகும் மற்றும் 30 விண்ணப்பங்கள் வரை மட்டுமே பெறப்படும்.

பட்டியலிடப்பட்டு தகுதி கொண்ட விண்ணப்பதாரர்கள் நேர்காணல் செய்யப்பட்டு, $1,000 மதிப்புள்ள கல்வி நன்கொடைக்காக ஒரு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்; இது நேரடியாகப் படிப்பில் சேருவதற்குச் செலுத்தப்படும். வெற்றிகரமான விண்ணப்பதாரர், ஒன்ட்டாரியோ பள்ளிக்கல்விக்கு அடுத்த நிலைக் கல்வித் திட்டத்தை ஏற்றுக்கொண்டதற்கான ஆதாரத்தை வழங்க வேண்டும்

**அறிஞர் கூற்றுக்கள்:**

“ஒவ்வொரு ஆண்டும் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, தீயணைப்பு சேவைகளில் தங்கள் தொழில் பாதையைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்களுக்கு ஆதரவளிக்கிறது. நமது நகரம் ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் ஆதரவளிக்கும் வகையிலான நகரமாகும் மற்றும் நமது ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பு அவ்வகையில் மிகச்சிறந்த ஒன்றாகும். ஒவ்வொரு நாளும் நமது சமூகத்தைப் பாதுகாக்க உழைக்கும் நிகரற்ற தனிநபர்களின் குழுவில் சேருவதற்கான முதல் படியை எடுக்கும் வகையில், ஜார்ஜ் ஹிட்ச்காக் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்து தங்கள் தொழில்பாதையை மேம்படுத்த விரும்பும் எவரையும் நான் ஊக்குவிக்கிறேன்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நமது சமூகத்தில் எத்தனையோ அர்ப்பணிப்பும் தகுதியும் உள்ளவர்கள் இருக்கிறார்கள். நிகரற்ற வகையில் உடனடியாக செவி சாய்ப்பவர்கள் கொண்ட வலையமைப்பை நாங்கள் உருவாக்குவதற்கும், அனைவருக்கும் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவதற்கும் இது ஒரு வழியாகும். நீங்கள் உங்கள் தொழிற்பாதையைத் தொடங்கும்போது, இது போன்ற வாய்ப்புகள் தங்கள் கதவுகளைத் திறந்து, தடைகளை உடைக்கும். உங்கள் எதிர்காலத்தைத் திட்டமிடும்போது இதற்காக விண்ணப்பிக்கவும்.”

*- தலைவர் பில் போயெஸ், தலைவர், ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பானது, சமூகத்திற்கு சேவை செய்யும் போது கல்வி மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது. ஜார்ஜ் ஹிட்ச்காக் மெமோரியல் எண்டோமென்ட் ஃபண்ட் என்பது தீயணைப்பு சேவையில் ஆர்வம் கொண்டு தலைவர்களாக விரும்பும் நபர்களுக்கான வருடாந்திர திட்டமாகும். இந்த நல நிதியானது, ஒரு குறிக்கோளுக்காக உந்துதல் கொண்ட வேலை மீது, பற்று கொண்ட ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளுக்கு ஆதரவளிக்கும் ஒரு வழியாகும்.”

*- மார்லன் கால்லிடீன், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள்

சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca